**FIRST INFORMATION REPORT** — **TAMIL NADU POLICE**

முதல் தகவல் அறிக்கை — INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110248

1. District மாவட்டம் : Coimbatore PS: காவல்நிலையம் : VX8 AC Year: ஆண்டு : 2020 FIR No.: மு.த.அ. எண் : 10/2020/AC/CB Date: நாள் : 13.11.2020

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 & Crpc — Sections பிரிவுகள்: 7(a), 7(A)
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: 102 Crpc
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் : 12.11.2020 — Date to நாள் வரை :
   Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : 16.30 hrs — Time to நேரம் வரை : 23.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 13.11.2020 — Time நேரம் : 04.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : 13.11.2020 — Time நேரம் : 04.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : Written (typed)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் :
   (b) Address : முகவரி : O/o. Joint Director Division-1, Industrial Safety & Health, Cross Cut Road, Coimbatore. at about 6 km South
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் : —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : Tr. P. Duraisamy — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : Pachaippan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 48/2020 — (d) Nationality : நாட்டினம் : Indian — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் : — Place of Issue : வழங்கப்பட்ட இடம் :
   (f) Occupation : தொழில் : Inspection Cell Officer/Deputy Collector — (g) Address : முகவரி : District Collector Office, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Tr. S. Venugobal, Joint Director, Division-1, Industrial Safety & Health, Cross Cut Road, Coimbatore. 2) Tmt. E.S. Santhini Prabha, Deputy Director Circle-1, Industrial Safety & Health, Coimbatore 3) Tr. S. Sathis Kumar, Driver O/o. Joint Director-1, Industrial Safety & Health, Coimbatore 4) Tr. N. Panaiyappan S/o. Nagapan, 65/102 Saban Garden, 4th Avenue, Mallampalayam Road Coimbatore

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் : — no delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

12/11/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

13.11.2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 13.11.2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. SASIREKHA
Rank: நிலை Inspector of Police No/எண்
V.S.A.C, Coimbatore

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

**Contents of FIR in Cr.No.10/2020/AC/CB u/s 7(a), 7(A) of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.P.C.**

இன்று 13.11.2020-ம் தேதி காலை 04.00 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் கி.சசிலேகா ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.ப.துரைசாமி ஆய்வுக்குழு அலுவலர்/துணை ஆட்சியர் கோயமுத்தூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 10/2020/AC/CB u/s 7(a),7(A) of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.P.C –ஆக வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர் ப.துரைசாமி, ஆய்வுக்குழு அலுவலர்/துணை ஆட்சியர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயமுத்தூர்-641018. பெறுநர் காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயமுத்தூர்-641030. ந.க.எண்.-598/2020/ஐ1 நாள் 13.11.2020 அய்யா/அம்மையீர் பொருள்- திடீர் தணிக்கை - கோயம்புத்தூர் மாவட்டம் - இணை இயக்குநர்-1 தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகம், கோயம்புத்தூர் - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை குறிப்புடன் புகார் மேல்நடவடிக்கைக்காக அனுப்புதல் - சம்பந்தமாக கோயம்புத்தூர் மாவட்டம், கிராஸ் கட் ரோட்டில் உள்ள தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் இணை இயக்குநர்- I தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் இணை இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் ஆகியோர் அவர்களது அதிகார எல்லைக்குட்பட்ட தொழிற்சாலைகளில் பாதுகாப்பு மற்றும் சுகாதார குறைபாடுகளை கண்டுகொள்ளாமல் இருப்பதற்காக மேற்படி தொழிற்சாலைகளின் உரிமையாளர்களிடமிருந்து தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மாமூல் கேட்டு பெற்று வருவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் 12.11.2020ம் தேதி மாலை 16.30 மணிக்கு திடீர் தணிக்கை செய்யப்பட்டது. திடீர் தணிக்கையில் கீழ்கண்ட விபரங்கள் தெரிய வந்தது. மேற்படி அலுவலகத்தில் திடீர் தணிக்கையின் போது இணை இயக்குநர் முதல் கோட்டம் திரு.S.வேணுகோபால், துணை இயக்குநர் முதல் சரகம் திருமதி.E.S.சாந்தினிபிரபா ஆகியோர் அலுவலகத்தில் இல்லை. இணை இயக்குநர் அலுவலகத்தில் வடகிழக்கு பகுதியில் உள்ள கணினி அறையில் "உ" பிரிவு உதவியாளர் திருமதி.சுதா, "ஊ" பிரிவு உதவியாளர் திருமதி.கற்பகம் மற்றும் இணை இயக்குநரின் அரசு வாகன ஓட்டுநர் திரு.சு.சதீஸ்குமார்

ஆகியோர்கள் இருந்தனர். மேற்படி கணினி அறையை சோதனை செய்த போது அந்த அறையின் தென்மேற்கு பகுதியில் போடப்பட்டிருந்த மரடேபிளின் வலதுபுற கீழ் டிராயரில் பணம் ரூ.5000/- வீசப்பட்ட நிலையில் சிதறி காணப்பட்டது. அந்த மரடேபிளுக்கு அருகில் இருந்த இருக்கையில் ஓட்டுநர் திரு.சதீஸ்குமார் என்பவர் அமர்ந்திருந்தார். அவரிடம் அந்த தொகையை பற்றி விசாரித்தபோது அந்த பணத்தைப் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறினார். மேலும் மேற்படி பணத்தைப் பற்றி அதே அறையிலிருந்த திருமதி.கற்பகம், திருமதி.சுதா ஆகியோரிடம் விசாரித்த போது, தாங்கள் மதிய உணவிற்காக அந்த அறைக்கு வந்ததாகவும், சாப்பிட்டு முடித்து அந்த அறையை விட்டு வெளியே வரும் போது ஓட்டுநர் திரு.சதீஸ்குமார் அந்த அறைக்கு வந்து மரடேபிளின் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்ததாகவும் மேற்படி பணம் பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் கூறினர். எனவே யாரும் உரிமை கோராத சந்தேகத்திற்குரிய பணம் ரூ.5000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அதே அறையில் வைக்கப்பட்டிருந்த குப்பைதொட்டியை சோதனை செய்த போது அதில் சுருட்டி போடப்பட்டிருந்த நிலையில் Gift voucher-கள் இருந்தன. அதனை பார்வையிட்டபோது (1). Annapoorna Cross cut road branch Gift voucher (orange colour) worth Rs.500/– 3 எண்ணிக்கையிலானது SL.No 31660, 31566, 31672, (2). Annapoorna Peoples park branch Gift voucher (Green colour) worth Rs.250/- 3 எண்ணிக்கையிலானது Sl.No. 136297, 136298, 136299, (3). Annapoorna Mettupalayam branch Gift voucher (Green colour) worth Rs.250/- Sl No.130884, (4). Annapoorna Gift voucher worth Rs.250/-(Green colour) கிளை பெயரின் விபரம் இல்லாமல் Sl.no.117085, 117086 கொண்டதாக காணப்பட்டது. மேலும் அந்த குப்பைத்தொட்டியில் கசங்கிய நிலையில் காவி நிற கவர் ஒன்று இருந்தது. அதில் JD-1, Coimbatore என்று பேனாவால் எழுதப்பட்டிருந்தது. மேற்படி 9 கிப்ட் வவுச்சர்களும், காவி நிற கவர் ஒன்றும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனை நடவடிக்கையின் போது மாலை சுமார் 17.30 மணியளவில் இணை இயக்குநர் -1 அலுவலக அறைக்குள் ஒரு நபர் கையில் 2 பாக்ஸ்களுடன் சென்றார். அவரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் பனையப்பன் என்றும் தான் கோவை, நல்லாம்பாளையம் ரோடு, சபரிகார்டன், அவன்யூ-4 கதவு எண்.65/102- என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், தான் சாய்பாபா காலனி கதவு எண்.22, ராமலிங்கம் நகர் முதல் லேஅவுட், கோவை-11 என்ற முகவரியில் Anu & Co என்ற பெயரில் சுமார் 12- வருடங்களாக அலுவலகம் நடத்திவருவதாகவும் தனது அலுவலகத்தின் மூலமாக கோவையில் உள்ள பலவகையான தொழிற்சாலைகளை நடத்திவரும் உரிமையாளர்களை சந்தித்து அவர்களது தொழிற்சாலைகளில் உள்ள Crane lift, Hoist, Power Press, Ventilation system

போன்ற கருவிகளை சோதனை செய்து தகுதிச்சான்றிதழ் வழங்கும் பணிகளை மேற்கொண்டு வருவதாகவும், அதற்காக தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்ட உரிமம் வைத்துள்ளதாகவும், கோவையில் உள்ள 30 முதல் 40 வரையிலான தொழிலகங்களில் உள்ள கருவிகளை சரிபார்த்து தகுதிச்சான்றிதழ் வழங்கி வருவதாகவும், கோவை கிராஸ்கட் ரோட்டில் இயங்கிவரும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார அலுவலகத்தில் பணிபுரியும் இணை இயக்குநர்-1 திரு.S.வேணுகோபால் மற்றும் துணை இயக்குநர் சரகம்-1 திருமதி.E.S.சாந்தினிபிரபா ஆகியோர் அவ்வப்போது தொழிற்சாலைகளை ஆய்வு மேற்கொள்வார்கள் என்றும் அப்போது தொழிற்சாலைகளில் உள்ள Crane lift, Hoist, Power Press, Ventilation system போன்ற Equipments-களில் உள்ள குறைபாடுகளை கண்டுகொள்ளாமல் இருக்கவும், தொழிற்சாலைகளில் உள்ள பாதுகாப்பு குறைபாடுகளை கண்டுகொள்ளாமல் இருக்கவும், தொழிலாளர்களுக்கான சுகாதார குறைபாடுகளை கண்டுகொள்ளாமல் இருக்கவும் மேற்படி அலுவலர்கள் தீபாவளி பண்டிகை சமயத்தில் மாமூலாக பணம் கேட்டுவாங்குவது வழக்கம் என்றும், அதேபோல் இந்த ஆண்டும் மேற்படி இணை இயக்குநர்-1 மற்றும் துணை இயக்குநர் சரகம்-1 ஆகியோர் கேட்டுக்கொண்டதின்பேரில் தான் சில தொழிலகங்களின் உரிமையாளர்களிடமிருந்து தீபாவளி மாமூல் பணத்தை வசூல் செய்து கொண்டும் இரண்டு Packed Assorted Dry Fruits-யும் எடுத்துகொண்டும் அவைகளை மேற்படி இணை இயக்குநர்-1 மற்றும் துணை இயக்குநர் சரகம்-1 ஆகியோருக்கு கொடுப்பதற்காக 12.11.2020ம் தேதி மாலை சுமார் 05.30 மணியளவில் கோவை கிராஸ்கட் ரோட்டில் உள்ள தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர்-1 அலுவலகத்திற்கு வந்து திரு.S.வேணுகோபால் அவர்களின் அறைக்குள் சென்றபோது திடீர் தணிக்கை குழுவினர் அவரை விசாரித்த போது மேற்படி விபரங்களை கூறினார். மேலும் அவரிடம் உள்ள பணம் குறித்து விசாரித்தபோது அவர் தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த ஒரு காக்கி நிற கவரில் இருந்த பணம் ரூ.1,11,000/-யும், தனியாக ரப்பர்பேண்ட் போடப்பட்டவாறு இருந்த ரூ.37,800/-யும் எடுத்து ஆஜர் செய்தார். அந்த காக்கி நிற கவரில் வலதுபக்க ஓரத்தில் Rs.111,000/- என பேனாவால் எழுதப்பட்டிருந்தது. மேற்படி பணம் ரூ.1,48,800/-ஐ குறித்து விசாரித்த போது அந்த அலுவலகத்தில் இணை இயக்குநர்-1 ஆக பணிபுரியும் திரு.S.வேணுகோபால் அவர்களுக்கு ரூ.1,11,000/-ம், துணை இயக்குநர் சரகம்-1 திருமதி.E.S.சாந்தினிபிரபா அவர்களுக்கு ரூ.37,800/-ம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கொடுப்பதற்காக தொழில் நிறுவனங்களிலிருந்து வசூல் செய்து கொண்டுவந்ததாக கூறினார். மேற்படி பணம் ரூ.1,11,000/- மற்றும் ரூ.37,800/- ஆக மொத்தம் ரூ.1,48,800/- மற்றும் காக்கி நிற கவர் ஆகியன விசாரணைக்காக கைப்பற்றப்பட்டன. மேலும் 1)

கோயம்புத்தூர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் கூடுதல் இயக்குநர் அலுவலகத்தின் 2020-ம் வருட நவம்பர் மாதத்திற்கான வருகை பதிவேட்டின் நகல், 2) கோயம்புத்தூர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் இணை இயக்குநர்-1 அலுவலகத்தின் 2020-ம் வருட நவம்பர் மாதத்திற்கான வருகை பதிவேட்டின் நகல், 3) கோயம்புத்தூர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் துணை இயக்குநர் முதல் சரகம் அலுவலகத்தின் 2020-ம் வருட நவம்பர் மாதத்திற்கான வருகை பதிவேட்டின் நகல் ஆகிய ஆவணங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டன. மேற்படி திடீர் சோதனையின் போது பணம் ரூ.1,53,800/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி திரு.பனையப்பன் என்பவரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் தணிக்கை விபரம் குறித்து ஒரு நடவடிக்கையை 12.11.2020ம் தேதி மாலை 16.30 மணி முதல் இரவு 23.30 மணிவரை தயார் செய்து அதில் அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,53,800/- மற்றும் ஆவணங்களை இத்துடன் இணைத்துள்ளேன். தணிக்கையின் போது கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக புலன்விசாரணை செய்து சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இணைப்பு: 1) நடவடிக்கை குறிப்பு, 2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,53,800/-, 3) பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம், 4) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள். (Sdxxxxx) ஆய்வுக்குழு அலுவலர், கோயமுத்தூர். Sir, received the complaint on 13.11.2020 at 04.00hrs and registered a case in Coimbatore V & AC Cr.No.10/2020/AC/CB u/s 7(a),7(A) of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.P.C. (Sdxxxxxx) K.Sasilekha Inspector of Police, V&AC, Coimbatore. இதன் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், நடவடிக்கைகள் மற்றும் ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டன.

K.Sasilekha 13.11.2020

(கி. சசிலேகா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.